40. இந்நகராட்சியில் 2021 – 2022 ஆம் ஆண்டிற்கு ஆண்டு கணக்குகள் இருப்பாய்வு செய்து பொதுப் பேரேட்டுடன் இணக்கம் செய்து வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதித்தணிக்கை பணிகளுக்காக உள்ளூர் பட்டயக் கணக்கர்கள் [Auditors] மூலமாக பணிகள் மேற்கொள்ள உத்தேச செசவினம் ரூ.1,20,000/– த்திற்கு அவசர அவசியம் கருதி உள்ளூர் பட்டயக் கணக்கர்கள் மூலம் விலைப்புள்ளி பெறப்படும் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அம்பேத்கார், பட்டயக் கணக்கர், வாழப்பாடி [Auditors] அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் செலவினத் தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதி செலவினம் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 186. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

41. இந்நகராட்சியில் மாடு அடிக்கும் ஆண்டு குத்தகை உரிமத்தை திரு.எம்.ஜெயராமன் த/பெ.முத்தையன் என்பவர் நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். அன்னார் மேற்படி குத்தகை உரிமத்தின் வைப்புத் தொகை ரூ.100000/– (ரூபாய் ஒரு இலட்சம் வங்கி வரைவோலை எண்.792/03, நாள்.31.01.2018) ஐ திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரது வைப்புத் தொகை ரூ.100000/– நகராட்சி குத்தகை வைப்பு பதிவேடு பக்கம் எண்.51ல் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை வைப்புத் தொகையினை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட மாடு அடிக்கும் தொட்டி ஆண்டு குத்தகை இனத்திற்கு மறு ஏலம் நடத்தி உரிமம் வேறு பெயருக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது. திரு.எம்.ஜெயராமன் த/பெ.முத்தையன், ஆத்தூர் என்பவர் மீது தணிக்கை தடைகள் ஏதுமில்லை என்பதால் வைப்புத் தொகை ரூ.100000/– திருப்பி வழங்கலாம். (ந.க.எண்.3807/2022/அ3).

**தீர்மானம் எண். 187. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

42. ஆத்தூர் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் ஆணையர் சென்னை அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்20452/2020/LA3, நாள்.31.03.201ன் வாயிலாக 15வது நிதி குழு மான்யம் Tied Grantன் கீழ் இரண்டாவது தவணைத்தொகையாக ரூ.90,56,442/–ஐ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிதியின்கீழ் ஆத்தூர் நகராட்சிக்கு இலகுரக வாகனம் (BOV) (பேட்டரியால் இயங்கும் வாகனம்) 15 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மூன்றாம் முறையாக 08.06.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள்கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | தகுதி |
|---|---|---|
| 1 | M/S.Covi Green Ride<br>1/190A , LIC Clony 2nd Street, Coimbatore–21. | தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி தகுதி பெற்றுள்ளது |
| 2 | M/S.Jagath Industry, 5/13Sanjay Nager, Coimbatore–21. | தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி தகுதி பெறவில்லை |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவால் தொழில்நுட்ப தகுதி குறித்து கூராய்வு செய்யப்பட்டது. இதில் M/S.Jagath Industry என்ற ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த Technical bids ஒப்பந்த விதிகளின்படி ஏற்று கொள்ளதக்க வகையில் இல்லாதால் தகுதி இழந்த ஒப்பந்தப்புள்ளியாக தொழில்நுட்ப கூராய்விலேயே (Technical bid) தகுதி நீக்கம் செய்யப்பட்டது. இதனால் இவரின் price bid ஒப்பந்தப்புள்ளியினை திறக்க தகுதியில்லை என்பதால் M/S.Covi Green Ride கோவை என்ற ஒரு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மட்டுமே தகுதி பெற்றதாக இருந்ததால் price bid மட்டும் 22.06.2022ல் திறக்கப்பட்டது. இதில் விலை விகிதப்பட்டியல் மதிப்பிட்டு விலையை விட குறைந்த விலை 2.38 %கொடுத்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி குறித்து ஒப்பந்த குழுவால் கூராய்வு செய்யப்பட்டதில் M/S.Jagath Industry ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த Technical bids ஒப்பந்த விதிகளின்படி ஏற்று கொள்ளதக்க வகையில் இல்லாததால் தகுதி இழந்த ஒப்பந்தப்புள்ளியாக தொழில்நுட்ப கூராய்விலேயே (Technical Evaluation) தகுதி நீக்கம் செய்யப்பட்டது.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் M/S.Covi Green Ride கோவை என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம், இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம் (ந.க.எண் 3356 /2020/இ1)

**தீர்மானம் எண். 188. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

43. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.18ல் பாரதியார் தெருவில் பழுதடைந்துள்ள 5 எண்ணிக்கை சிறுபாலங்களை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக 5 எண்ணிக்கை சிறுபாலங்கள் அமைத்தல் பணிக்கு நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.70, நாள்.27.05.2022ல் ரூ.2,10,000/-மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு 23.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு .ஆர். செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.02 மதிப்பீட்டு விலையைவிட குறைவு |
| 2 | M/S.ஸ்ரீ.பழனி என்ஜினியரிங் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.04% மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு .ஆர். செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் 0.02% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு .ஆர். செல்லக்கண்ணு ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2419 /2022/இ1)

**தீர்மானம் எண். 189. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

44. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.17ல் உருது பள்ளி அருகிலுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப்லைன் நீட்டிப்பு செய்து அதனுடன் பி.வி.சி டேங் வைத்து மூஸ்லீம் தெரு, காதர்பேட்டை மற்றும் கிரைன்பஜார் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்து தர கோரி இந்த வார்டு நகர்மன்ற உறுப்பினர் தனது கடிதத்தில் கோரியுள்ளார். மேற்படி பகுதிகளில் பைப் லைன் நீட்டிப்பு செய்து குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2644 /2022/இ1)

**தீர்மானம் எண். 190. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

45. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.7ல் முத்துநகர் பகுதிகளில் உள்ள தெருக்களுக்கு, தெருவிளக்குகள் இல்லாத காரணத்தால் அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் இரவு நேரங்களில் வெளியே சென்று வர குழந்தைகள் மற்றும் வயதான பெரியோர்கள் மிகவும் அச்சப் படுவதாகவும் அப்பகுதி பொதுக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் முத்துநகர் மெமயன் சாலை பகுதிகளில் பத்து எண்ணிக்கை தெருவிளக்குகள் புதியதாக பொருத்த தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலமாக தெருவிளக்கு, மின்வயர் இல்லாத பகுதிக்கு தெருவிளக்கு மின்வயர் பொருத்தவும் மற்றும் இதரப்பணிகள் செய்வதற்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2533/2022/இ1)

**தீர்மானம் எண். 191. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

46. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.13ல் கம்பபெருமாள் கோவில் தெருவிலுள்ள சமுதாய கழிப்பிடம் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் மற்றும் வயதான பெண்கள் ஆகியோர்கள் மேற்படி கழிப்பிடதை பயன்படுத்த இயலாததால் பெரிதும் சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி கழிப்பிடத்தை பழுது நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.3032/2022/இ1)

**தீர்மானம் எண். 192. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

47. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.15ல் வண்டிபேட்டைபகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நகர் நலவாழ்வு மையத்திற்கு கழிவறை, கழிவு நீர் தொட்டி சுற்று சுவர் அமைத்தல் பணிக்கு மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ரூ.5,70,000/- மதிப்பீட்டிற்கு 23.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு .ஆர். செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.05 மதிப்பீட்டு விலையைவிட குறைவு |
| 2 | திரு.எம்.பூமாலைநாயக்கர் ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.10% மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு .ஆர். செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் 0.05% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு .ஆர். செல்லக்கண்ணு ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3131 /2022/இ1)

**தீர்மானம் எண். 193. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

48. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையுள்ள பகுதிகளின் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக ஜி.ஐ குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.15, நாள்.30.03.2022ல் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு 19.04.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி செய்து வந்த தற்சமயம் இப்பணிக்கு நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட தொகை முழுவதுமாக செலவிப்பட்டதால் தற்சமயம் வார்டு எண்.19 முதல் 33 முடிய உள்ள பகுதிகளின் குழழய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யவும் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2339 /2022/இ1)

**தீர்மானம் எண். 194. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**49.** ஆத்தூர் நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் KNMT. 15TH CFC CT.PT, UPWC. NULM ஆகிய பணிகள் நடைபெற்று வருவதால் மேலும் KNMTதிட்டத்தின் கீழ் சாலைகள், பூங்காக்கள், அறிவுசார் மையம் போன்ற பணிகள் நடைபெற்று துவங்கும் நிலையிலும் உள்ளது. மேலும் பழைய பேருந்து நிலையம் புனரமைப்பு பணிகள் புதிய மார்கெட் கட்டுதல், கார்/ இரு சக்கரவாகனம் பார்க்கிங் போன்ற பணிகளுக்கு விரிவான திட்ட கருத்துருக்கள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் மேலும் இதன் புகைப்படங்கள் Trone கேமரா மூலம் புகைப்படம் எடுத்து திட்ட கருத்துருக்கள் தயார் செய்து அனுப்ப கோரப் பட்டுள்ளது. மேலும் ஆகஸ்ட் 15ம் நாள் சுதந்திர தினவிழா புகைப்படங்கள் எடுக்கவும் ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் நகராட்சியில் மாசற்ற முறையில் பணிபுரிந்துள்ள நகராட்சி அலுவலர்கள் மற்றும் 33 பணியாளர்களுக்கு நற்சான்றுகள் வழங்கவும் மேற்காணும் பணிகள் மேற் கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடுத் தொகை ரூ.35,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் விபரம் | அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.அசோக் ஸ்டுடியோ & வீடியோ விநாயகபுரம் , ஆத்தூர் | ரூ.5800 /-குறைவு |
| 2 | திரு .சரவணாஸ் ஸ்டுடியோ & வீடியோ காமராஜனார் ரோடு , ஆத்தூர் | ரூ.6000 /- அதிகம் |
| 3 | திரு .கண்ணன் ஸ்டுடியோ & வீடியோ தாயுமானவர் தெரு, ஆத்தூர் | ரூ.5900 /- அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் திரு.அசோக் ஸ்டுடியோ &வீடியோ விநாயகபுரம் ,ஆத்தூர் என்பவரின் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.அசோக் ஸ்டுடியோ & வீடியோ விநாயகபுரம் ,ஆத்தூர் என்பவரின் விலைப் புள்ளியினை இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பணிமேற் கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 3357/2022/இ1)

**தீர்மானம் எண். 195. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**50.** ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17வரையுள்ள பகுதிகளின் 103 ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுவருகிறது. மேற்படி மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகள் 01.04.2022 முதல் மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.12, நாள்30.03.2022ல் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு 19.04.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிசெய்து வந்த தற்சமயம் இப்பணிக்கு நகர் மன்றத்தால் அனுமதிக்கப்பட்டதொகை முழுவதுமாக செலவிப்பட்டதால் தற்சமயம் வார்டு எண் முதல் 17 முடிய உள்ள பகுதிகளின் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யவும் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 2376 /2022/இ1)

**தீர்மானம் எண். 196. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

51. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்கள் 1, 6 மற்றும் 7ஆகிய பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்கள் மீது உள்ள சிலாப் மற்றும் சிறுபாலங்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் அந்த வழியாக செல்லும் பொதுமக்களுக்கு பெரிதும் இடையூறாக உள்ளதால் பொதுமக்கள் நலன்கருதி மேற்படி பழுது அடைந்துள்ள மழைநீர் வடிகால்கள் சிலாப் மற்றும் சிறுபாலங்கள் அப்புறப்படுத்தி விட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2535 /2022/இ1)

**தீர்மானம் எண். 197. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

52. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17 வரையுள்ள பகுதிகளின் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக ஜி.ஐ குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வும் நகர் மன்றம் தனது தீர்மானம் எண்**15,** நாள்.30.03.2022ல் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில், மேற்படி பணிக்கு 19.04.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிசெய்து வந்த தற்சமயம் இப்பணிக்கு நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட தொகை முழுவதுமாக செலவிப்பட்டதால் தற்சமயம் வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளின் குழழய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யவும் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 2378 /2022/இ1)

**தீர்மானம் எண். 198. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

53. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையுள்ள பகுதிகளின் 103 ஆழ்துளை கிணறுகளின்மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகள் 01.04.2022 முதல் மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.13, நாள்.30.03.2022ல் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு 19.04.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிசெய்து வந்த தற்சமயம் இப்பணிக்கு நகர் மன்றத்தால் அனுமதிக்கப்பட்டதொகை முழுவதுமாக செலவிப்பட்டதால் தற்சமயம் வார்டு எண்.18 முதல் 33 முடிய உள்ள பகுதிகளின் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யவும் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 2679 /2022/இ1)

**தீர்மானம் எண். 199. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

54. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு காவலர் பணி மற்றும் நகர்முழுவதும் உள்ள மின்மோட்டார்களை இயக்குதல் ஆகிய பணிகளை இது நாள்வரை அலுவலக பணியாளர்கள் வாயிலாக செய்யப்பட்டு வந்தது. தற்சமயம் 209 ஆழ்துளை கிணறுகள் மற்றும் 9 மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் ஆகியன ஆத்தூர் நகராட்சியில் உள்ளதால் ஏற்கனவே பணி செய்த பொறியியல் பிரிவு பணியாளர் வயது முதிர்வு மற்றும் உடல் நிலை சரியில்லாமல் மரணம் அடைந்துள்ளதால் மேற்படி பணிகளை கவனிக்க போதிய ஆட்கள் இல்லை. எனவே (Out sourcing) ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் 10 பணியாளர்களை 01.09.2022முதல் 30.11.2022 முடிய 3 மாதங்களுக்கு பணியில் அமர்த்திக் கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண் 143,நாள் 27.07.2022ல் ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு 23.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு. .ஆர். செல்லக்கண்ணு<br>ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.71%மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |
| 2 | M/S.ஸ்ரீ.பழனி என்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>ஒப்பந்ததாரர் ஆத்தூர் | மதிப்பீட்டு விலைக்கே |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.ஸ்ரீ.பழனி என்ஜினியரிங் ஒர்க்ஸ் , ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் மதிப்பீட்டு விலைக்கே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/S.ஸ்ரீ.பழனி என்ஜினியரிங் ஒர்க்ஸ், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3033 /2022/இ1)

**தீர்மானம் எண். 200. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**55.** ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்18ல் பாரதியார் தெரு பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் போது பொதுமக்களுக்கு குடிநீர் சரியாக வருவதில்லை எனவே இதனை சரி செய்து தடையின்றி அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக கடைவீதி மெயின் ரோட்டிலிருந்து அம்பளத்தடி வாத்தியார் தெரு வழியாக பாரதியார் தெருவிற்கு புதியதாக 6’’ பி.வி.சி குடிநீர் குழாய் அமைக்க நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.136, நாள்.27.07.2022ல் ரூ.2,75,000/-ம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 23.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு .ஆர். செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.01% மதிப்பீட்டு விலையைவிட குறைவு |
| 2 | M/S.ஸ்ரீ.பழனி என்ஜினியரிங் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.25% மதிப்பீட்டுவிலையைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு .ஆர். செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் 0.01% மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு .ஆர். செல்லக்கண்ணு ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2676 /2022/இ1)

**தீர்மானம் எண். 201. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**56.** நகராட்சிக்குட்பட்ட கடைவீதி நீர்தேக்கத்தொட்டி காந்தி நகர் நீர்தேக்க பம்பிங் மெயின் இரண்டாவது காந்திரோடு வழியாக சேலம் -கடலூர் சாலை வழியாக பம்பிங் மெயின் 200MM சி.ஐ குழாய் ஏற்கனவே அமைக்கப்பட்டது. இந்த குழாயில் குடிநீர் ஏற்றுவது கால தாமதம் ஏற்படுவதால் குறிப்பிட்ட நேரத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயல வில்லை எனவே மேற்படி குழாயில் ஏதேனும் அடைப்பு உள்ளதா என ஆய்வு செய்ய 200MM சி.ஐ குழாய் நான்கு இடங்களில் பரிசோதனை செய்ய வேண்டி உள்ளதால் குழி தோண்டி குழாயினை துண்டித்து அடைப்புகள் ஆய்வு செய்தல் பணிகள் தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.2,00,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 202. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

57. ஆத்தூர் நகராட்சி வார்டு எண் 16ல் கருத்தான் தெரு பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து அதில் நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தி பைப்லைன் நீட்டிப்பு செய்து அதனுடன் அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் தண்ணீர் ஏற்றி அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற த்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.203. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

58. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான வண்டிப்பேட்டை பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்2022–2023 கீழ் அறிவு மையம் (Knowledge Centre) அமைக்க அரசானை எண் (Ms) சூடி 88, நாள் 17.06.2022ல் ரூ.196.20 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியதன் மேற்படி பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்001/2022/Do1, நாள்.28.06.2022ல் மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியதன் பேரில் பணிக்கு 15.07.2022ல் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்த மான வண்டி பேட்டை பகுதியில் புதியதாக நூலகம் அறை கட்டுதல் பணி | M/S.V.S.அசோசியேட்ஸ் PropV.முருகேசன் ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 4.95%மதிப்பீட்டைவிடகூடுதலாக கொடுத்து உள்ளதால் விலையை குறைத்து தர கோரப் பட்டதில் இறுதியாக 0.01%க்கு மதிப்பீட்டை விட குறைந்த விலையில் பணியை செய்து தர சம்மத கடிதம் அளித்து உள்ளார். |
| | | M/S.S.R.கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 5.69% மதிப்பீட்டைவிட கூடுதலாக கொடுத்து உள்ளார் |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதி குறித்து (Technical Evaluation) ஒப்பந்த குழுவால் கூராய்வு செய்யப்பட்டதில் இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப தகுதி பெற்றி இருந்ததால் இதில் விலை விகிதப்பட்டியல் மதிப்பிட்டு விலையைவிட கூடுதலாக (5.69%) M/S.S.R.கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ளார். அதைவிட குறைவான (4.95%) மதிப்பீட்டு விலையைவிட கூடுதலாக கொடுத்து உள்ள M/S.V.S.அசோசியேட்ஸ் PropV.முருகேசன் ஒப்பந்ததாரருக்கு விலை குறைத்து தரகோரி கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் 4.46% விலை குறைத்து இறுதியாக 0.01.% மதிப்பீட்டு விலையை விட குறைந்த விலைக்கு பணி மேற்கொள்ள சம்மத கடிதம் அளித்துள்ளதை மன்றம் ஏற்று அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1562 /2022இ1)

**தீர்மானம் எண். 204. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

59. ஆத்தூர் நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 25 பேட்டரியால் இயங்கி வரும் (BOV) வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு செய்து தர கோரி துப்புரவு ஆய்வாளர் தனது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி 25 பேட்டரியால் இயங்கி வரும் (BOV) வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு (AMC)பணிகள் மேற்கொள்ள தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.5.25,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2417/2022/இ1)

**தீர்மானம் எண். 205. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

60. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்கள் 1, 8,4, 5, 15, 16, 18, 24, 3, 10, 30, 31, 29 மற்றும் 23, ஆகிய பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் இல்லாத பயன்பாட்டிற்கு ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளில் புதியதாக மின்மோட்டார்கள் , கேபிள் வயர்கள், பேணல் போர்டுகள் ஜி.ஐ பைப் பொருத்தி மற்றும் பைப்லைன் அமைத்து அப்பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்து தர மேற்படி வார்டு நகர் மன்ற உறுப்பினர்கள் தனது கடிதங்களில் கோரியுள்ளதால், மேற்படி பணிக்கு கீழ்கண்டவாறு அந்தந்த வார்டுகளுக்கு பணிகள் மேற்கொள்ள தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதீப்பீடுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.5ல் இளங்கோ தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 2 | வார்டு எண் 5ல் குப்பு சாமி தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள | 2.00 |

| | | |
|---|---|---|
| | ஆகும் உத்தேச மதிப்பீடு | |
| 3 | வார்டு எண்.16ல் செல்வ விநாயகர் கோவில் தெருவிலுள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 4 | வார்டு எண் 15ல் தட்டான் சாவடியில் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 5 | வார்டு எண்.1ல் தென்னங்குடிபாளையம் நந்தனார் தெருவிலுள்ள ஆழ்துளை கிணற்றில் மினி பவர் பம்பு மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 6 | வார்டு எண்.8ல் கோட்டை பெருமாள் கோவில் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 7 | வார்டு எண்.4ல் முல்லைவாடி ரங்கன் நகர் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 8 | வார்டு எண்.2ல் நடுப்பெரியார் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மினி பவர் பம்பு மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 9 | வார்டு எண்.30ல் நகராட்சி குடியிருப்பு தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மினி பவர் பம்பு மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 10 | வார்டு எண்.30ல் கிரைன்பஜார் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 11 | வார்டு எண்.23ல் SC ரோடு தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 12 | வார்டு எண் 10ல் மாரிமுத்துரோடு ரோடு தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 13 | வார்டு எண்.4ல் வடக்குபாவேந்தர் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து பைப் லைன் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 14 | வார்டு எண் 5ல் வெங்கடசாமி தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து பைப் லைன் பொருத்தி குடிநீர் பணிகள்மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 15 | வார்டு எண்.18ல் பாரதியார் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.50 |
| 16 | வார்டு எண் 24ல் காந்தி நகர் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் | 2.50 |

| | | |
|---|---|---|
| | மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடுஃ | |
| 17 | வார்டு எண்.3ல் முல்லை வாடி கலைஞர் காலனி தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 18 | வார்டு எண்.10ல் லட்சுமிபுரம் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு | 2.00 |
| 19 | வார்டு எண்.30ல் தெற்கு மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 20 | வார்டு எண். 31ல் அம்பேத்கர் நகர் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து பைப்லைன் பொருத்தி குடிநீர் பணிகள்மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |
| 21 | வார்டு எண். 31ல் அம்பேத்கார் நகர் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து பைப்லைன் பொருத்தி குடிநீர் பணிகள் மேற்கொள்ளஆகும் உத்தேச மதிப்பீடு | 1.50 |

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.3029 /2022/இ1)

**தீர்மானம் எண். 206. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

61. தமிழக தினம் சிறப்பு விழா கடந்த 19.07.2022 ம் தேதியன்று கொண்டாட பட்டதை ஒட்டி ஆத்தூர் நகராட்சியின் சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளிளில நடை பெற்ற திட்டப் பணிகளின் விபரங்களை தொகுத்து மாலை தமிழகம் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு ஆன செலவினத்தொகை ரூ.15,750/—ஐ விளம்பரம் செய்த நிறுவனமான மாலை தமிழகம் சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொகையினை மாலை தமிழகம் நாழிதழுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2862/2022/இ1)

**தீர்மானம் எண். 207. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

62. தமிழக தினம் சிறப்பு விழா கடந்த 19.07.2022 ம் தேதியன்று கொண்டாடப்பட்டதை ஒட்டி ஆத்தூர் நகராட்சியின் சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற திட்டப்பணிகளின் விபரங்களை தொகுத்து தினதந்தி தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு ஆன செலவினத் தொகை ரூ.16,921/—ஐ விளம்பரம் செய்த நிறுவனமான தினசரி சேலம் என்ற நிறுவனத்திற்கு விளம்பர கட்டணம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி தொகையினை தினதந்தி நாழிதழுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2822/2022/இ1)

**தீர்மானம் எண்.208. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

63. தமிழக தினம் சிறப்பு விழா கொண்டாடப்பட்டதை ஒட்டி ஆத்தூர் நகராட்சியின் சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளில் நடை பெற்ற திட்டப் பணிகளின் விபரங்களை தொகுத்து EVENING TAMIL NADU தினசரி நாளிதழில் கடந்த 22.07.2022 ம் தேதியன்று பிரசுரம் செய்தமைக்கு ஆன செலவினத் தொகை ரூ.14,490/—ஐ விளம்பரம் செய்த நிறுவனமான தினசரி சேலம் என்ற நிறுவனத்திற்கு விளம்பர கட்டணம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொகையினை EVENING TAMIL NADU நாழிதழுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3149 /2022/இ1)

**தீர்மானம் எண்.209. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

64. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15ல் வண்டிப்பேட்டை பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நகர் நல வாழ்வு மையம் கட்டிடத்திற்கு கழிவறை கழிவு நீர் தொட்டி, சுற்றுச்சுவர், கேட் கூடுதலாக கழிவறை மற்றும் பேவர் பிளாக் ஆகியன செய்ய வேண்டியுள்ளதால், மேற்காணும் பணியானது செய்தால் மட்டுமே மேற்படி கட்டிடத்தினை பொதுமக்கள் பயன்படுத்த இயலும். எனவே மேற்காணும் பணிக்கு ஆகும் தோராய மதிப்பீடு ரூ.5.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 210. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

65. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் தெற்கு பகுதியில் நுழைவு பகுதி முதல் வெற்றிலை மார்கெட் வழியாக அலெக்சாண்டர் தெரு சந்திப்பு வரை உள்ள பழுதடைந்த சிமெண்ட் சாலையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் ஆய்வு செய்தபோது மேற்படி சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் இதனை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே உடனடியாக சீரமைக்க தெரிவித்துள்ளார். எனவே மேற்படி சாலையினை பேவர்பிளாக் சாலையாக அமைத்தல் பணிக்கு தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 211. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

66. ஆத்தூர் நகராட்சி அய்யனார் கோவில் ஏரி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பைப் லைன் நீட்டிப்பு செய்து பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீடுத் தொகை ரூ.1.25 இலட்சத்திற்கு மன்ற த்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 3257/2022/இ1)

**தீர்மானம் எண். 212. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

67. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பைத்தூர் ரோடு Bio Mining மற்றும் அப்பம சமுத்திரம் ஆகிய குப்பைகிடங்கில் உள்ள குப்பைகளை நேரில் அளவீடு செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.30,000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு 13.08.2022ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப் பெற்ற முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளிகள் விவரம் | விலைவிபரம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S.Digital Land Surveying ,Coimbatore-4 | ரூ.29,500/-மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S DIGIT SURVEYORS CONSULT CY ,R47.6, Mettur-6 | ரூ.37,000/- மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | Thru.R,Muthusamy &Co muthalai, adaiveedu-3 | ரூ.35,000/- மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் M/S.Digital Land Surveying ,Coimbatore–4 என்பவரின் மதிப்பீட்டை விட குறைந்த விலை கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலை கொடுத்துள்ள நிறுவனமான, M/S.Digital Land Surveying ,Coimbatore–4 என்பவரின் விலையினை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3114/2022/இ1)

**தீர்மானம் எண். 213. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

68. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.11ல் பூங்கோவலர் தெரு, கிழக்குமாதாகோவில் தெரு மற்றும் பன்னீர் செல்வம் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அல்லாத ஜி.ஐ பைப் லைன் பழுதடைந்துள்ளதை மாற்றி அதற்கான உதிரி சாமான்கள் மற்றும் மராமத்து செய்து தர கோரி இந்த வார்டு நகர் மன்ற உறுப்பினர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார் அதன்படி பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீடுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 3258/2022/இ1)

**தீர்மானம் எண். 214. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

69. ஆத்தூர் நகராட்சிக்கு ஆத்தூர் நகராட்சி அலுவலகத்திலுள்ள அனைத்து பிரிவுகளிலும் இணையதள சேவை பகிர்ந்து அளிப்பதற்கு பணிகள் தடையின்றி நடைபெறுவதற்கு Local Intrenet Line இணைப்பிற்கு வசதி செய்தல் பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.43,000/–க்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு 22.08.2022ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப் பெற்ற முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளிகள் விவரம் | விலைவிபரம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S.SPYDER TECHOLGYசூரமங்களம் மெயின் ரோடு சேலம். | ரூ.43,000/–மதிப்பீட்டு விலையில் |
| 2 | M/S VENUS TECH களரம்பட்டி ரோடு சேலம்–15 | ரூ.44,800/–மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |
| 3 | திரு.ராஜ் கம்பியூட்டர்ஸ் , சூரமங்களம் சேலம்–5. | ரூ.45,600/–மதிப்பீட்டு விலையைவிடகுறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் M/S.SPYDER TECHOLGY சூரமங்களம் மெயின் ரோடு சேலம். என்பவரின் மதிப்பீட்டு விலையில் கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையில் கொடுத்துள்ள நிறுவனமான, M/S.SPYDER TECHOLGY சூரமங்களம் மெயின் ரோடு சேலம். என்பவரின் விலையினை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.3187/2022/இ1)**

**தீர்மானம் எண்.215. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

70. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.13ல் சாத்தனார் தெரு பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து அதில் நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தி பைப்லைன் நீட்டிப்பு செய்து அதனுடன்அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் தண்ணீர் ஏற்றி அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயார் செய்துள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2795/2022/இ1)

**தீர்மானம் எண். 216. நாள்.30.08.2022 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

26/09/2022
தலைவர்
ஆத்தூர் நகராட்சி.